விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 16 ஞாயிறு 01.08.2021 மலர் - 2, இதழ் - 117

# பி.எம்.கேர்ஸ் உதவி



விஜயபாரதம்

கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் நலனுக்காக, 'பி.எம் கேர்ஸ்' என்ற திட்டத்தை, பிரதமர் மோடி அறிவித்தார். பெற்றோரை இழந்த ஒவ்வொரு குழந்தைக்கும் இத்திட்டத்தின் கீழ், ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும், இலவச உறைவிடக் கல்வி, மருத்துவ காப்பீடு உள்ளிட்டவை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் 'கடந்த ஏப்ரல் மே மாதங்களில் 645 குழந்தைகள் கொரோனா காரணமாக தங்கள் பெற்றோரை இழந்துள்ளதாக தகவல்கள் வந்துள்ளன. கொரோனா தொற்றுக்கு பெற்றோரை இழந்த குழந்தைகளின் விபரங்களை, இணையதளத்தில் 15 நாட்களுக்குள் பதிவு செய்ய மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. பி.எம் கேர்ஸ் திட்டத்தில் உதவி பெற, கடந்த 29ம் தேதி வரை தமிழகத்தைச் சேர்ந்த 112 குழந்தைகள் உட்பட 292 குழந்தைகளின் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன' என மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி நாடாளுமன்றத்தில் கூறினார்.

# காவடி ஊர்வலத்திற்கு தடை


விஜயபாரதம்

ஆகஸ்ட் 2ம் தேதி ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு வேலூர் மாவட்ட முருகன் கோயில்களில் கரோனா ஊரடங்கை காரணம் காட்டி, பக்தர்கள் கோயில்களில் தரிசனம் செய்ய மட்டும் அனுமதி. காவடி ஊர்வலங்களுக்கு அனுமதி கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல திருத்தணி முருகன் கோயிலில்ஆகஸ்ட் 4வரை பக்தர்களுக்கு மொத்தமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பல்வேறு முருகன் கோயில்களுக்கும் இதே நிலைதான். ஆனால், இதே கொரோனா பொதுமுடக்கக் காலத்தில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கிறிஸ்தவர்களின் மங்கனித் திருவிழா, முஸ்லிம்களின் பக்ரீத் பண்டிகை உள்ளிட்டவை நடைபெற்றன. அவற்றை கொரோனாவை காரணம் காட்டி தடுக்காத தமிழக அரசு, ஹிந்துக்களின் விழாக்களை மட்டும் திட்டமிட்டு தடுப்பதாக பக்தர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். சமூக இடைவெளியுடன் விழாக்களை கொண்டாட தேவையான நடவடிக்கைகளை ஹிந்து அறநிலையத்துறை செய்யாமல் அதனை ஒட்டுமொத்தமாகத் தடுப்பது கண்டனத்துக்கு உரியது என இணையதளவாசிகளும் பொதுமக்களும் கண்டித்துள்ளனர்.



விஜயபாரதம்

# வேலூர் இப்ராஹிம் கருத்து

பா.ஜ.கவின் சிறுபான்மை அணி தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம், சேலத்தில் பேசுகையில், 'தமிழகத்தில் சிறுபான்மை அணி நிர்வாகிகளை சந்தித்து உள்ளாட்சி தேர்தலில் பா.ஜ.கவினர் வெற்றி பெற தொடர்ந்து கூட்டம் நடத்தி வருகிறோம். பா.ஜ.க இஸ்லாமியர்களுக்கு எதிரானது என, தி.மு.கவும் அதன் கூட்டணியினரான திருமாவளவன் உள்ளிட்டோரும் மக்களை துாண்டிவிட்டு பகைமை சூழலை உருவாக்கியுள்ளனர். இதை உடைத்தெறிய கிறிஸ்தவர், இஸ்லாமியர்களை நேரில் சந்தித்து பா.ஜ.கவின் சாதனைகள் குறித்து விளக்குவோம். தமிழகத்தில் பா.ஜ.கவினர், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் ஓட்டு சேகரிக்க சென்றால், ஆளும் தி.மு.கவினரும் காவல்துறையும் தடுக்கின்றனர். தி.மு.க.,வில் திருமாவளவனுக்கும் அவர் கட்சிக்கும் மரியாதை இல்லை. ஆனால், பா.ஜ.கவில் பட்டியலினத்தவர் மாநில தலைவராகவும் மத்திய அமைச்சராகவும் ஆகிறார். இதை புரிந்து கொண்டால் திருமாவளவனும் பா.ஜ.கவை ஆதரிப்பார்' என கூறினார்.

# குரல் கொடுப்பார்களா?



விஜயபாரதம்

அரும்பாக்கத்தில் உள்ள ஆர்.கே நகரின் கூவம் ஆற்றுப்பகுதியில் சுமார் 250க்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் உள்ளன. இந்த வீடுகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டது. விரைவில் காலி செய்ய வேண்டும் என அதிகாரிகள், அப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். பின்னர் இரு தினங்களுக்கு முன் எந்த நோட்டீசோ, மாற்று இடமோ தராமல் அந்த குடிசை வீடுகளை சென்னை மாநகராட்சி அகற்றியுள்ளது என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர். வீடுகளை இடித்து வெளியேற்றப்பட்டதால், பொதுமக்கள் கண்ணீருடன் வீதிகளில் நின்ற காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அனைவரையும் உலுக்கியது. ஆனால், பட்டியலின மக்களின் உரிமைக்காகவே கட்சியை நடத்தி வருவதாக கூறும் திருமாவளவன் இந்த விவகாரத்தில் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. தனது கட்சி நிர்வாகி வன்னியரசு மூலம் இது தி.மு.க அரசு செய்தது என்பதை சுட்டிக் காட்டாமல், "கடந்த அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் தொடங்கிய சேரி மக்களின் ஒப்பாரி ஓலங்கள் இன்னும் தொடர்வது வேதனையிலும் வேதனை" எனக் கூறியுள்ளார். கடந்த அ.தி.மு.க அட்சியின் போது சத்தியவாணி முத்து நகர் பகுதியில் உள்ள 370 குடிசைகளை அகற்றப்பட்டதற்கு அரசைக் கண்டித்து கூவம் நதியில் இறங்கி அப்பகுதி மக்களுடன் போராடிய இயக்குநர் பா. ரஞ்சித், தற்போது மௌனம் காக்கிறார். இதேபோல வைகோ, சீமான், கம்யூனிஸ்ட்டுகள் என யாரும் தி.மு.கவிற்கு எதிராக இதுவரைவாய் திறக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

# சுதந்திர தின ஆலோசனை




விஜயபாரதம்

இந்தியாவின் 75வது சுதந்திர தினம் இந்த மாதம் 15ம் தேதி நாடு முழுவதும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட உள்ளது. டெல்லி செங்கோட்டையில் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடம் உரையாற்ற உள்ளார். அந்த சுதந்திர தின உரையில் தான் என்ன பேச வேண்டும் என்பது குறித்து பொதுமக்கள் @ mygovindia'வில் ஆலோசனை வழங்கும்படி, பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இந்து முன்னணி செயற்குழு



விஜயபாரதம்

இந்துமுன்னணி அமைப்பின் மாநில சிறப்பு செயற்குழு கூட்டம் புதுச்சேரியில் நேற்று துவங்கியது. இந்துமுன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். புதுச்சேரி கோட்ட ஆர்.எஸ்.எஸ் தலைவர் ஆடிட்டர் செல்வராஜ் திருவிளக்கு ஏற்றி துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில், மாநில, கோட்ட பொறுப்பாளர்கள் உட்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் முக்கிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த செயற்குழு கூட்டத்தில் பல முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு, தீர்மானங்கள் இயற்றப்பட உள்ளதாக தெரிகிறது.

# காலிஸ்தான் பயங்கரவாதிகள் மிரட்டல்




விஜயபாரதம்

பஞ்சாப்பை தனி நாடாக்க கோரும் காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளித்து வரும் அமைப்புகளில் ஒன்று நீதிக்கான சீக்கியர்கள் அமைப்பு. இது அமெரிக்காவில் இருந்து செயல்படுகிறது. இவர்கள் தரப்பில், ஹிமாச்சல பிரதேச தலைநகர் சிம்லாவைச் சேர்ந்த 20 பத்திரிகையாளர்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில், தன்னை இந்த அமைப்பின் பொது ஆலோசகர் குர்பத்வந்த் சிங் என, அறிமுகம் செய்து கொண்ட ஒருவர், ஹிமாச்சலில் முதல்வரும், பா.ஜ.கவைச் சேர்ந்தவருமான ஜெய்ராம் தாக்குர் தேசியக் கொடியேற்ற அனுமதிக்க மாட்டோம். பஞ்சாபின் ஒரு பகுதியாக ஹிமாச்சல் இருந்தது. முதற்கட்டமாக பஞ்சாப்பை விடுவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். அதன்பின், ஹிமாச்சல பிரதேசத்தையும் கைப்பற்றுவோம் என்று கூறியுள்ளார். இது குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# அண்ணாமலை அறிக்கை - எதிர் கட்சிகள் கலக்கம்



விஜயபாரதம்

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட மத்திய நீர் வளத்துறை அமைச்சர், மேகதாதுவில் அணை கட்ட அனுமதி தரக்கூடாது. ஒரே கட்சியாக இருந்தாலும், கர்நாடக அரசின் இந்த முடிவை எதிர்த்து, ஆகஸ்ட் 5ல், தஞ்சாவூரில், என் தலைமையில், தமிழக பா.ஜ.க விவசாய அணி சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும்' என, அண்ணாமலை அறிவித்துள்ளார். இதனை சற்றும் எதிர்பாராத எதிர்கட்சிகளிடையே இந்த அறிவிப்பு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை மெய்ப்பிக்கும் விதமாக, போகாத ஊருக்கு அண்ணாலை வழி கூறுகிறார் என காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். காவிரி பிரச்னையில், பிரதமர் மோடி, ஜல் சக்தி அமைச்சகத்தைதான், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் அணுக வேண்டும். அதை விடுத்து, தெளிந்த பார்வையின்றி அண்ணாலை போராட்டம் அறிவித்துள்ளார் என புரிந்துகொள்ளமுடியாத அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் மா.கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ். இது தமிழக போராட்டக் களத்தை திசை திருப்பும் முயற்சி என கருத்து தெரிவித்துள்ள விவசாய சங்கத் தலைவர் பி.ஆர் பாண்டியன், அந்த கருத்தின் வாயிலாக கை நழுவும் தங்களின் அரசியல் பிடிப்பை வெளிச்சம்போட்டுக் காட்டிவிட்டார் என நெட்டிசன்கள் வலைத் தளங்களில் கருத்து பதிவு செய்துள்ளனர்.

# கூட்டுப் போர் பயிற்சி

ரஷ்யாவின் 325வது கடற்படை தின கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக நம் நாட்டின் ஐ.என்.எஸ் தபார் போர்க்கப்பல் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கடற்படை தளத்திற்கு சென்றது. இதன் ஒரு பகுதியாக இரு நாடுகளும் பால்டிக் கடற்பகுதியில் போர் பயிற்சிகளை மேற்கொண்டன. இரு நாடுகளுக்கு இடையிலான நட்பு, ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்தும் விதமாக 'இந்திரா' என அழைக்கப்படும் இந்த கடற்படை பயிற்சி இரு நாடுகளுக்கு இடையே ஆண்டு தோறும் நடைபெறுகிறது.

விஜயபாரதம்



# பெகாசஸ் முடக்கம்



விஜயபாரதம்

பெகாசஸ் உளவு மென்பொருள் தவறாக பயன்படுத்தப்பட்டதாக உலகெமெங்கும் புகார்கள் எழுந்தன. இதனையடுத்து அதனை என்.எஸ்.ஓ நிறுவனத்தில் இஸ்ரேல் அரசு அதிகாரிகள் விசாரனை நடத்தினர். இந்த நிலையில் இது குறித்து மேலும் விசாரிக்க ஏதுவாக அந்த மென்பொருளை யாரும் பயன்படுத்த முடியாதவாறு தற்காலிகமாக முடக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் வாடிக்கையாளர் விவரங்களை வெளியிட இஸ்ரேல் பாதுகாப்புக்குழு தடை விதித்துள்ளதைத் தொடர்ந்து எந்த நாட்டின் வாடிக்கையாளர்கள் முடக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி தெரிவிக்கப்படவில்லை.

# மாங்குரோவ் காடு மறு உருவாக்கம்


விஜயபாரதம்

கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் இருந்து 10 கி.மீ தூரத்தில் உள்ள சொதிகுப்பம் என்ற கிரமத்தில், உப்பனாறு கரையில் 15 கி.மீ தூரத்துக்கு மாங்குரோவ் காடுகள் உள்ளன. தானே புயலிலும், 2015ம் ஆண்டு வெள்ளத்திலும் இந்த மாங்குரோவ் காடுகள் அழிந்து விட்டன. மீண்டும் இந்த காடுகளை உருவாக்க மத்திய அரசு நிதி ஒதுக்கியும் எந்த பணிகளும் நடைபெறவில்லை. அவற்றை மீண்டும் உருவாக்க உத்தரவிட வேண்டும் என கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேலும் அதில், 10 கோடி ரூபாய் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது என மத்திய அரசு குழு மதிப்பீடு செய்துள்ளது. மாங்குரோவ் காடுகளை மீண்டும் வளர்க்காவிட்டால், சுற்றுச்சூழலுக்கும் பறவைகளுக்கும் ஆபத்து ஏற்படும் என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் இது குறித்து அரசின் கருத்தை அறிந்து தெரிவிப்பதாக கூறினார். இதையதையடுத்து மனுவுக்கு மூன்று வாரங்களில் பதிலளிக்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை தள்ளி வைத்தனர்.

# ராணுவ பேச்சுவார்த்தை


விஜயபாரதம்

பாரதத்தின் லடாக் எல்லையில் சீன ராணுவம் அத்துமீறி ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதை அடுத்து பாரத சீன ராணுவத்துக்கு இடையே கடந்த ஆண்டு மோதல் மூண்டது. இதை முடிவுக்கு கொண்டு வர இரு நாட்டு ராணுவ கமாண்டர்கள் அளவிலான பேச்சுவார்த்தையில் படைகளை விலக்கி கொள்ள சம்மதம் தெரிவிக்கப்பட்டு எல்லையின் சில நிலைகளில் இருந்து இருதரப்பும் தங்கள் படைகளை விலக்கிக் கொண்டன. இந்நிலையில் ராணுவ கமாண்டர்கள் அளவிலான, 12வது சுற்று பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது.

# காங்கிரஸ் எம்.எல்.ஏ. விலகல்



விஜயபாரதம்

அசாமில் இரண்டு முறை தோரா தொகுதியில் இருந்து எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரசை சேர்ந்த சுஷாந்தா போர்கோஹைன் காங்கிரசிலிருந்து விலகினார். மாநில காங்கிரஸ் தலைவர் பூபன் போராவுக்கு அவர் அனுப்பிய ராஜினாமா கடிதத்தில், தனது ராஜினாமாவுக்கு கட்சியில் தற்போதுள்ள உள் அரசியல் சூழல்தான் காரணம். துரதிருஷ்டவசமாக, நான் எடுத்த அனைத்து முயற்சிகளும் பயனற்று போய்விட்டது. அதனால் நான் இந்த இறுதி முடிவை எடுத்துள்ளேன் என குற்றம் சாட்டினார். ஹிமாந்தா பிஸ்வா சர்மா தலைமையிலான பா.ஜ.க அரசு பொறுப்பேற்ற பிறகு காங்கிரசில் இருந்து விலகிய இரண்டாவது அசாம் எம்.எல்.ஏ சுஷாந்தா போர்கோஹைன். கடந்த மாதம், நான்கு முறை எம்.எல்.ஏவாக இருந்த மரியானி ரூப்ஜோதி குர்மி காங்கிரசிலிருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்தார்.

# சீனாவில் கொரோனா பரவல்



விஜயபாரதம்

சீனாவின் நான்ஞ்சிங் லுகோவ் சர்வதேச விமான நிலையத்தில் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது. இந்த புதிய நோய்த்தொற்று குறைந்தது பத்து நகரங்களுக்கு பரவியிருக்கலாம் என சீன அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் நான்ஞ்சிங்கில் அனைத்து விமான சேவைகளும் ஆகஸ்ட் 11 வரை ரத்து செய்யப்பட்டுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஷாங்காயின் வடமேற்கில் உள்ள நான்ஞ்சிங்கின் பல்லாயிரக்கணக்கான மக்களை வீட்டிலேயே இருக்குமாறு சீன அரசு உத்தரவிட்டுள்ளது. மக்களிடம் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டவர்களில் பலர் சமீபத்தில் மியான்மருக்கு சென்று வந்ததாக யுன்னான் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே மியான்மருடனான சீனாவின் தென்மேற்கு எல்லையில் உள்ள யுன்னான் மாகாணத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த சீன அதிகாரிகள் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர்.

# பால கங்காதர திலகர்



விஜயபாரதம்

திலகர் ஒரு மிகச்சிறந்த "தேசியவாதியும்", "சமூக சீர்திருத்தவாதியும்", விடுதலைப் போராட்ட வீரருமாக அறியப்படுபவர். பாரத விடுதலை இயக்கத்தில் முதல் மக்கள் ஆதரவு பெற்ற தலைவரும் இவரே. இவரது பெயருடன் கௌரவப் பட்டமான "லோகமான்ய" என்பதையும் சேர்த்து அழைப்பதுண்டு. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதனை நான் அடைந்தே தீருவேன்' என்னும் திலகரின் புகழ் பெற்ற கூற்று இன்றும் பாரதத்தில் நினைவுகூரப்படுகிறது. திலகரின் சீடரான வ. உ. சிதம்பரம் பிள்ளை "தென்னாட்டுத் திலகர்" என்று அழைக்கப்படுகிறார்.

மகாதேவ் கோவிந்த் ரானடே ஆரம்பித்த சர்வஜய்னிக் சபாவில் சேர்ந்து பொதுத் தொண்டாற்றினார். ரானடே ஆற்றிய சொற்பொழிவும் விஷ்ணு சாஸ்திரி சிப்லுண்கர் எழுதிய கட்டுரைகளும் திலகரை ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கத் தூண்டியது.

சுவாமி விவேகானந்தரின் பரிவ்ராஜக வாழ்க்கையின் போது, ரயிலில் அவரது சக பிரயாணியாக வந்தவர் திலகர். பின்னர் திலகரின் இல்லத்தில் 10 நாட்கள் சுவாமி விவேகானந்தர் தங்கியிருந்தார். இதே அறையில்தான் புகழ்பெற்ற விநாயகர் திருவிழாவையும் திலகர் ஆரம்பித்தார். திலகர் பாதிக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து உழைத்தார்.

இந்திய தேசிய காங்கிரசில் திலகர் சேர்ந்தார். அப்போது அது அடிமை மனப்பாங்குடன் இருந்தது. லார்டு கர்ஸன் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். இதை திலகர் கடுமையாக எதிர்த்தார். சுதேசி பொருட்கள் ஆதரவு, அந்நிய பொருட்கள் பகிஷ்கரிப்புகளை நடத்தினார். இது பின்னாளில் காந்திஜியால் ஒத்துழையாமை இயக்கம் என்ற புதிய பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திலகருக்கு, விபின் சந்த்ர பாலும், லாலா லஜபத் ராயும் துணை நின்றனர். இவர்கள் லால் பால் பால் என்றும் மும்மூர்த்திகள் என்றும் அழைக்கப்பட்டனர். கோகலே போன்றோர் ஆங்கிலேயரை எதிர்க்காமல் எதையும் கேட்டுபெற வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். அவர்களுக்கு திலகரின் செயல்கள் அச்சத்தை ஏற்படுத்தியது.

காங்கிரஸ் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று இரண்டாகப் பிரிந்தது. திலகர் தீவிரவாதிகள் தலைவரானார். ஆங்கில அரசு அவரைக் கைது செய்து பர்மா சிறைக்கு அனுப்பியது. சிறையில் கீதா இரகசியம் என்ற நூலை எழுதினார். கடுமையான நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டார். அவரது இறுதி ஊர்வலத்தில் சுமார் 2,00,000 பேர் கலந்துகொண்டனர்.

# வலையில் சிக்கிய மீம்கள்




